

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2025) சென்னை, கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள அனைத்து விதமான பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் உயர்தர மத்திய ஆய்வகத்தை பார்வையிட்டபோது, மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி, ஆய்வகத்தில் இன்றையதினம் இதுவரை 2390 பல்வேறு வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார் உடனிருந்தார்.

# கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சென்னை, ஆக.11 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.**

’பிறகு, விழா முடிவுற்று இல்லம் செல்லும் வழியில், முதலமைச்சர் அவர்கள், சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவமனையில் உள்ள அவரச சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, இரத்த பரிசோதனை, சளி பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, சதை பரிசோதனை உள்ளிட்ட அனைத்து விதமான பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் உயர்தர மத்திய ஆய்வகத்தையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, மருத்துவமனை இயக்குநர் அவர்கள், சிகிச்சை பெற்றுவரும் 121 புற மருத்துவ பயனாளிகள் (OUT PATIENTS), 326 உள் மருத்துவ பயனாளிகளுக்கு (IN PATIENTS), மத்திய ஆய்வகத்தில் இன்றையதினம் இதுவரை 2390 பல்வேறு வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அம்மருத்துவமனையில் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மருத்துவ பயனாளியிடம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை விவரங்கள் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். அப்போது, அவர் மருத்துவமனையில் சிகிச்சை நல்ல முறையில் அளிப்பதாகவும், நன்றாக கவனித்துகொள்வதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, உள் மற்றும் புற மருத்துவ பயனாளிகளின் சிகிச்சை விவர பதிவேடுகள், மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

அத்துடன், மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்றும், இம்மருத்துவமனையில் மருத்துவ பயனாளிகளுக்கு தேவையான சிகிச்சைகளை காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி மற்றும் மருத்துவர் ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ‘நலன் காக்கும் ஸ்டாலின்’ திட்டம்!

# ஆகஸ்ட்-9 முகாமில் 48,418 பேர் பயன்பெற்றனர்!

சென்னை, ஆக. 11–

முதல்வர் அவர்களால் கடந்த வாரம் தொடங்கப்பட்ட “நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் சீரிய சிறப்புமிகு திட்டம் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை 1256 இடங்களில் நடைபெற உள்ளது. அதன்படி ஆகஸ்ட் -9 தமிழ்நாட்டில் 36 இடங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. அதன் மூலம் தற்போது இறுதியாக முடிவுற்று பயன்பெற்ற ‘மருத்துவப்பயனாளர்களின் ’எண்ணிக்கை 48418 என்பதை அறிவிக்க மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

| District | Total Registrations |
|---|---|
| Ariyalur | 1573 |
| Chengalpattu | 1006 |
| Coimbatore | 1538 |
| Cuddalore | 870 |
| Dharmapuri | 1176 |
| Dindigul | 1474 |
| Erode | 1454 |
| Kallakurichi | 1419 |
| Kancheepuram | 1033 |
| Kanniyakumari | 1453 |
| Karur | 1112 |
| Krishnagiri | 1292 |
| Madurai | 1191 |
| Mayiladuthurai | 1363 |
| Nagapattinam | 1079 |
| Namakkal | 1396 |
| Perambalur | 890 |
| Pudukkottai | 1434 |
| Ramanathapuram | 1237 |
| Ranipet | 1187 |
| Salem | 1436 |
| Sivaganga | 1341 |
| Tenkasi | 1000 |
| Thanjavur | 1431 |
| Theni | 1092 |
| Thiruvallur | 1949 |
| Thiruvarur | 968 |
| Thoothukkudi | 1542 |
| Tiruchirappalli | 1197 |
| Tirunelveli | 2407 |
| Tirupathur | 1448 |
| Tiruppur | 1288 |
| Tiruvannamalai | 2191 |
| Vellore | 1328 |
| Viluppuram | 1535 |
| Virudhunagar | 1088 |
| **Grand Total** | **48418** |

இவ்வாறு அரசின் செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



கரூர் அருகே உள்ள நெரூரில் ”நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை துவக்கி வைத்து சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

